முற்பகல் 11–40

6. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஈ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2018-2019, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2018–2019 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

MESSAGE

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, R.N. Ravi, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2018–2019 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."

9. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2018–2019, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018–2019 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018–2019 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29–6–2024 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள்

2018–2019 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)
மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2018–2019 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	14,52,31,709	..	..
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	..	2,65,20,837	..
27	தொழில் துறை	..	..	2,083
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	4,64,59,316	..	..
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	118,24,40,945	..	..

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	..	277,54,93,666	..
43	பள்ளிக் கல்வித் துறை	1062,93,22,719	..	..
	பெருமொத்தம்	**1200,34,54,689**	**280,20,14,503**	**2,083**

6. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2024 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.